






# "கழகத்துக்காரர் என்றால், கம்பீரம் தானாக வரும்!"

**கழக இளைஞர் அணி கடந்த பிப்ரவரி 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடத்திய இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில் கழகக் கொள்கை பரப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா அவர்கள் ஆற்றிய எழுச்சியுரை:**

"திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி சார்பில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான இளைஞர்களை அழைத்துப் போட்டி நடத்தி, அதில் மிகச் சிறப்பாக வெற்றி பெற்றவர்களை, இளம் பேச்சாளர்கள் என்ற ஒரு பெரிய குடையின் கீழ் கொண்டு வந்திருக்கின்ற கழக இளைஞர் அணிச் செயலாளர்- தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சர் - எதிர்காலத்தில் இந்த இயக்கத்தையும் தமிழ் இனத்தையும் தலைமையேற்று, வழிநடத்த இருக்கின்ற ஆருயிர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,

இந்தப் பயிற்சி முகாமில் பங்கேற்று, எதிர்காலத்தில் தமிழ்நாடெங்கும் வலம் வர இருக்கின்ற வீறுகொண்ட சொற்பொழிவாளர்களே, உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள்.

கடந்த 30, 40 ஆண்டுகளாக தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளராக, இன்றைய முதலமைச்சர் கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் இருந்த காலம்தொட்டு, பின்னர் நான் மாணவர் அணிச் செயலாளராக பொறுப்பேற்ற காலத்திலும், இரண்டு அணிகளும் இணைந்து நடத்திய பயிற்சி முகாம்களைவிட, இது கொஞ்சம் மாறுபட்ட கோணத்தில் அமைந்திருக்கிறது.

இன்றைய தலைமுறையினருக்கு ஏற்ற வகையில், இன்றைக்கு வாழ்கின்ற மக்களுடைய எதிர்பார்ப்பிற்கும் ரசனைக்கும் ஏற்ப, இந்த இளைஞர்களைத் தயார்செய்கின்ற அந்தப் பயிற்சியில் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒரு அருமையான முறையினைக் கையாண்டு இருக்கிறார். அதை காணுகின்ற வாய்ப்பு, எனக்கும் கிடைத்ததில் பெரும் மகிழ்ச்சி.

## வாய்மையால் வென்றோம்

இன்றைக்கு எதிரே அமர்ந்திருக்கிற நீங்கள், நாளைக்கு இந்த இயக்கத்தைக் காப்பாற்றப் போகிறவர்கள். கழகம் தோன்றி, பதினெட்டாவது ஆண்டு, 1967-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற நேரத்தில், அறிஞர் அண்ணா அவர்களிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வி. 'இவ்வளவு விரைவில், எப்படி உங்களால் பெரிய கட்சியை வீழ்த்தி, ஆட்சிக்கு வர முடிந்தது?' என்று. அதற்கு அண்ணா சொன்ன பதில், 'வாய்மையால் வென்றோம்' என்றார். 'புரியவில்லை' என்றார்கள். 'வாயால் பேசினோம். மையால் எழுதினோம் நாட்டு மக்கள் மனம் மாறியது. ஆட்சியும் மாறியது' என்று அண்ணா சொன்னார்.

காலம் எவ்வளவு மாறினாலும், மேடைப்பேச்சு என்பது என்றைக்கும் மாறாது. எவ்வளவோ தகவல் தொழில்நுட்பம் வளர்ந்திருந்தாலும், விஞ்ஞான யுகமாக இருந்தாலும்கூட, ஒரு பொதுக்கூட்டம் நடக்கிறபோது, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்பவை அளவிட முடியாதவை.

ஒரு பொது இடத்தில், ஒரு தேநீர்க் கடையில், ஒரு பயண நேரத்தில், ஒரு விழா மண்டபத்தில் பல பேர் உட்கார்ந்து, ஒரு பொருள் குறித்து பேசுகிறபோது, அதிலே கடைசியாக வெற்றி பெறுகிறவர்களைப் பார்த்து, என்ன சொல்வார்கள் தெரியுமா?

'நீ தி.மு.க. காரன் அப்படித்தான் பேசுவாய்' என்பார்கள். ஏன் மற்றவர்களுக்கெல்லாம் பேசத் தெரியாதா? தெரியும். ஆனால், கழகத் தோழர்களைப் போல பேசத் தெரியாது. அடிப்படையான ஆதாரங்களோடு அழுத்தமான வாதங்களோடு எந்த இடத்திலும் வெல்லக்கூடிய அளவிற்கு, வல்லமையோடு இந்தத் தோழர்களை அறிஞர் அண்ணா தயார்படுத்தினார், தன் கடிதங்களின் மூலமாக.

அடுத்து, தலைவர் கலைஞர் அவர்கள் **'உடன் பிறப்பு'** என்ற மடலின் மூலமாகத் தொண்டர்களைத் தயார்படுத்தினார். இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தொலைக்காட்சி மற்றும் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக, **'உங்களில் ஒருவன்'** எனபதன் அடிப்படையில், எல்லா வகையிலும் உங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்.



இளம் பேச்சாளர்களுடன் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின்

## கழகம் செல்கின்ற திசை

நாட்டு நடப்பு என்ன, நம்முடைய கடமை என்ன, அதிலே கழகத்தினுடைய குறிக்கோள் என்ன என்பது, முதலில் உங்களுக்குத் தெரிந்தால்தான், நீங்கள் ஊருக்குப் புரிய வைக்க முடியும். ஒரு பிரச்சினை நடைபெறுகிறதென்றால், அதில் நம்முடைய நிலைப்பாடு என்ன, கழகம் செல்கின்ற திசை என்ன என்பதை எண்ணுவதற்கு முன்னால், ஒன்றை நீங்கள் எந்தக் காலத்திலும் மறந்து விடக்கூடாது.

## சமூக நீதியே அடிப்படை

நம்முடைய கரங்கள் வியாபித்து நிற்கலாம். விண்ணை நோக்கி நிற்கலாம். ஆனால், நம்முடைய கால்கள் மண்ணில் ஆழமாக உறுதியாக ஊன்றி இருக்க வேண்டும். அதுதான் வேர். அந்த அடிப்படையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அடிப்படைக் கொள்கை, எந்தக் காலத்திலும் மாறாது. வேறு எவராலும் நம்மை வெற்றிகொள்ள முடியாததற்கான காரணம், நம்முடைய அடித்தளம் என்பது சமூக நீதியின் அடிப்படையில் அமைந்தது.

நான் இரண்டு உதாரணங்கள் சொல்கின்றேன். காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி சேர்ந்து, 1971-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பில் அமர்கிறது. டெல்லியிலே, இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிக்கு வருகிறார். 234 இடங்களில் 184 இடங்கள் வெற்றி பெறுகிறோம். அதற்கு முன்பும் சரி, பின்பும் சரி, அந்தளவுக்கு யாருமே வெற்றி பெற்றதில்லை.

## திரும்பப் பெறுங்கள்

நாடாளுமன்றம் முழுவதும், நம்முடைய கூட்டணியைச் சார்ந்தவர்கள்தான். அப்படி இரு கட்சிகளும் இணைந்து செல்லுகின்ற நேரத்தில், 'அவசரநிலை பிரகடனம்' வருகிறது. நம்முடைய கூட்டணிக்கட்சி கொண்டுவந்ததே என்பதற்காக, நாம் அவசரநிலைப் பிரகடனத்தை ஆதரிக்கவில்லை.

இந்தியாவிலேயே அவசர நிலை அறிவிக்கப்பட்ட 48-வது மணி நேரத்தில், கழகத்தின் செயற்குழுவைக் கூட்டி, அந்த அவசர நிலையைக் கண்டித்ததோடு மட்டுமில்லை, கடற்கரையிலே மாபெரும் கூட்டத்தைக் கூட்டி, 'அவசர நிலையைத் திரும்பப் பெறுங்கள். தலைவர்களை விடுதலை செய்யுங்கள். ஜனநாயகத்தை நிலைநிறுத்துங்கள்' என்று தலைவர் கலைஞர் அறிவித்தார்.

இந்திராகாந்தி அம்மையார் கலைஞரிடம் 'நீங்களும் நானும் தோழமைக் கட்சி. எதற்காக எங்களை எதிர்க்கிறீர்கள்?' என்று கேட்ட பொழுது கலைஞர் சொன்னார், 'தோழமை என்பது வேறு, ஜனநாயகம் வேறு. யார் அதற்கு ஊறு விளைவித்தாலும், அதை எதிர்க்கிற முதல் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும்' என்றார்.

## உறவுக்குக் கை கொடுப்போம்

அவர் உருவாக்கிய வாக்கியம்தான் **'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்.'** அதன் விளைவாக என்ன நடந்தது? ஆட்சி கலைக்கப்பட்டது. எல்லோரையும் பிடித்து, சிறையில் அடைத்தார்கள்.

இன்றைய முதலமைச்சர் திருமணம் ஆகி மிகக் குறைந்த காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டு, தம்பி உதயநிதி மகனாகப் பிறந்து சிறைச்சாலையில் கொண்டுபோய் காட்டுகின்ற அளவிற்கு, **ஓராண்டு** காலம் சிறையிலே வாழ்ந்து, அந்த அடிப்படையில் வளர்ந்தவர்தான் இன்றைய முதலமைச்சர். சிறைச்சாலையிலே தன் தந்தையைக் குழந்தையாகப் பார்த்த உதயநிதி ஸ்டாலின் இன்றைக்கு அதே வீரத்துடன் நிற்கிறார்.

இரண்டாவது உதாரணம், பாரதிய ஜனதாவுடன் கூட்டணி சேர்கின்ற ஒரு நிலை வந்தது. அப்போது நம்முடைய கழகத்தின் சார்பில், முன்னணித் தலைவராக இருந்த முரசொலி மாறன் அவர்கள் தலைமையில், குறைந்தபட்ச பொதுச் செயல் திட்டம் ('காமன் மினிமம் புரோகிராம்') என்று ஒன்றைக் கொண்டு வந்தோம்.

## உத்தரவாதத்துடன் கூட்டணி

அதில் சொல்லப்பட்டது என்ன தெரியுமா? எந்தக் காலத்திலும் இராமர் கோயில் கட்டப்படாது. எந்தக் காலத்திலும் 'பொது சிவில் சட்டம் வராது', ஆக எவற்றையெல்லாம் நாம் எதிர்த்துக் கொண்டிருக்கிறோமோ, அதை இந்த ஆட்சிக் காலத்தில் எங்களுடைய பலத்தோடு நீங்கள் செய்யக்கூடாது என்ற உத்தரவாதத்துடன், நாங்கள் கூட்டணியில் சேர்ந்தோம். ஆக கூட்டணி பதவி கிடைக்கப் போகிறது என்ற போதிலும், நம் அடிப்படைக் கொள்கைகளை எந்த நேரத்திலும் கைவிட்டதில்லை என்பதற்கு, அது உதாரணம்.

அப்போது கல்வி அமைச்சராக இருந்த முரளி மனோகர் ஜோஷி, பல்கலைக்கழகங்களில் சோதிடத்தைப் பாடத்திட்டமாக கொண்டு வருவது, என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். இந்த அறிவிப்பு வந்தபோது, முரசொலி மாறன் அவர்கள் அப்போது அமைச்சர். நான் நாடாளுமன்ற உறுப்பினர். முரசொலி மாறன் என்னை அழைத்து 'நீ நாடாளுமன்றத்தில் இந்த அறிவிப்பை எதிர்த்துப் பேசு' என்றார்.

**திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அடிப்படைக் கொள்கை, எந்தக் காலத்திலும் மாறாது. வேறு எவராலும் நம்மை வெற்றிகொள்ள முடியாததற்கான காரணம், நம்முடைய அடித்தளம் என்பது சமூக நீதியின் அடிப்படையில் அமைந்தது.**

அப்படி நான் பேசும்போது, சோதிடத்தைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதில் உள்ள அபாயத்தைப் பற்றிப் பேசிவிட்டு, இன்னொன்றையும் நான் சேர்த்துச் சொன்னேன். தவறுகள் நடக்கிற இடத்தில், தி.மு.க. இருக்காது. தி.மு.க. இருக்கிற இடத்தில் தவறுகள் நடக்காது' என்று. இது நானாக சொன்னது.

## அது என்னுடைய கருத்து

மாலையில், முரசொலி மாறனைச் சந்தித்தபோது என்னுடைய உரையை வாங்கிப் படித்தவர், திருப்பிக் கொடுத்துவிட்டு ஒன்றுமே சொல்லவில்லை. செய்தி தலைவருக்கு வந்து சேர்ந்திருக்கிறது. மூன்று தினங்கள் கழித்து, வடசென்னையில் நடைபெறுகிற பொதுக்கூட்டத்தில் கலைஞர் பேசுகிறார். 'நேற்றைக்கு முன் தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில், தம்பி திருச்சி சிவா கழகத்தின் சார்பில், சோதிடத்தை எதிர்த்துப் பேசுகிற போது ஒரு கருத்தைத் தானாக சொல்லி இருக்கிறார்.

'கூட்டணியில் இருக்கிறோம். அப்படிப்பட்ட கூட்டணிக் கட்சியில் இருந்துகொண்டு, தி.மு.க. இருக்கிற இடத்தில் தவறுகள் நடக்காது, தவறுகள் இருக்கிற இடத்தில் தி.மு.க. இருக்காது' என்று அவர் சொல்லி இருக்கிறார். அது அவருடைய சொந்த கருத்து என்று சொல்ல மாட்டேன் அது என்னுடைய கருத்து. அது கழகத்தின் கருத்து' என்று அவர் சொன்னபோது, நான் சிலிர்த்துப் போனேன்.

**திருச்சி சிவா எம்.பி.**
**கழகக் கொள்கை பரப்புச் செயலாளர்.**

'தமிழ்நாடு' என்ற ஒன்று இருக்கிற வரை 'தமிழன்' என்று ஒருவன் வாழ்கிற வரை, திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தாக வேண்டும். அதற்கான காரணங்கள்தான் அடிப்படைக் கொள்கை. சமூக நீதி, என்பதை, நாம் நடை முறைப்படுத்த ஆரம்பித்ததற்கு பின்னால்தான் இன்றைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கிற ஒருவரைப் பார்த்து, 'நீ என்ன ஜாதி' என்று கேட்பதில்லை. சாதியைக் கேட்டுவிட்டு, 'எழுந்து போ' என்று சொல்வதில்லை. எல்லோரையும் அண்ணன் தம்பியாய் பார்க்கிற நிலை வந்தது.

## இந்த இயக்கம் மாற்றியது

டெல்லியில் பார்த்தால், எல்லோருடைய பெயரும் 'சர்மா' என்று முடியும், 'ராவ்' என்று முடியும். இன்னும் சிலருக்கு 'சிங்' என்று முடியும் அவை சாதி பெயர்கள். 'பானர்ஜி' 'சட்டர்ஜி' என்றுதான் இருக்கும். ஆனால், நான் திருச்சி சிவா என்றிருப்பேன். அவர்களிடம் சொல்வேன்.

உங்களுக்கெல்லாம் பெயருக்குப் பின்னால் சாதிப்பெயர் உண்டு. எங்களுக்கெல்லாம் பெயருக்குப் பின்னால், பல்கலைக்கழகத்தின் பட்டம் உண்டு என்று. அதைத்தான் அடையாளமாக, இந்த இயக்கம் மாற்றியது என்று சொல்லுகிற போது பெருமிதம்.

நான் இப்போது சொல்கிறேன் நீங்கள் எல்லாம் யார் என்றால், *You are soldiers. Soldiers of the DMK party. 'Who is your President?'* என்று யாராவது கேட்டால் *'Udhayanidhi Stalin'* என்று கம்பீரத்துடன் சொல்ல வேண்டும்.

கம்பீரம் வந்து விட்டாலே, கழகத்துக்காரன் என்ற தைரியம் நமக்கு வரும். அப்போதுதான் பேச முடியும்.

## ஜனநாயகம் காக்க

எப்படி அவசரநிலை காலத்தில், இந்த நாட்டின் ஜனநாயகத்தை நிலைநிறுத்த கலைஞர் நின்றாரோ, அதேபோல் எதிர்காலத்தில் ஜனநாயகத்தைக் காக்க, இன்றைய தளபதி ஸ்டாலின் அவர்கள் நிற்பார். அவருக்குப் பின்னால் ஒரு படை அணிவகுத்து நிற்கும். அந்தப் படையில் இருப்பவர்கள் கொஞ்சம் வயதிலே மூத்தவர்கள். ஆனால், இதோ என் தம்பி உதயநிதியின் பின்னால் நிற்பவர்கள் இளைஞர்கள். நீங்கள் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் அந்தப் படை இருக்கிறது. இளைஞர் அணி ஐந்து பேரோடு உருவாக்கப்பட்ட காலத்தில், நான் தளபதியோடு கிளம்பியவன். இன்று ஐந்து லட்சம் நிர்வாகிகளைக் கொண்டிருக்கிறது, இளைஞர் அணி.

முதன்முதலாக கருப்பு என்பதை புரட்சியின் நிறமாகக் கொண்டு வந்தவன் இத்தாலி நாட்டில் போராடிய மாஜினி. அந்தக் கருப்பு நிறத்தைக் கொண்டு இந்தச் சமுதாயத்தில் இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை, சாதியினால் மதத்தினால் இருக்கின்ற பிரிவுகளை அகற்றுவதற்கு பெரியார் கொண்டுவந்த நிறம் கருப்பு. பொருளாதார ஏற்றத்தாழ்வு, உயர்ந்த வன், தாழ்ந்தவன், உழைப்பவன், உண்டுகொழுப்பவன் இதைப் போக்குவதற்காக மாபெரும் அறிஞன் காரல் மார்க்ஸ் கண்ட நிறம் சிவப்பு. இந்த இரண்டையும் இணைத்துக்கொண்ட, சாதிய, வர்க்க ஏற்றத்தாழ்வை எதிர்த்துப் போராடும் தி.மு.க.வின் நிறம் கருப்பு சிவப்பு.

## ஐம்பெரும் முழக்கங்கள்

கலைஞர், நமக்கு அளித்த ஐம்பெரும் முழக்கங்களை நெஞ்சில் ஏந்துங்கள்.

**அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**

**ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!**

**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

**வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!**

**மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!**

**(இளம் பேச்சாளர்கள் அனைவரும் முழக்கமிடுகின்றனர்.)**

கிளம்புங்கள் தோழர்களே, வரலாற்றை எழுதுங்கள். எல்லோருக்கும் என் பாராட்டுகள்.

நன்றி! வணக்கம்."